# வாலிபர் சங்கம் ஓர் வரலாறு

"வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்".
(சங்கீதம் 127.5)

கிறிஸ்துநாதர் ஆலயம் என்ற பலவான் கையிருக்கும் அம்புகள் போன்ற எமது வாலிப சங்கம் என்னும் சிற்பமானது 1953ம் ஆண்டு கனம் ஜே.வி. யோர்க் என்ற குருவானவரின் ஆதரவில் செதுக்கப்பட ஆரம்பித்தது. அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும் என்ற பழமொழிக்கேற்ப எமது வாலிப சங்கத்தை சேர்ந்த அன்றைய கால பல திறமையான சிற்பர்களின் அன்பு கலந்த அடிகளினால் வாலிப சங்கம் என்ற சிற்பமானது பல்வேறு துறைகளில் துரித வளர்ச்சியைக் கண்டது. அன்றைய சிற்பர்களின் அயராத முயற்சி, உழைப்பு இன்றி, இன்று எமது வாலிபர் சங்கமானது சிறந்த சங்கமாக விளங்குவது முடியாத காரியமே. ஆகவே அன்று எமது சங்கத்தை மேலோங்கி எழ அரும்பாடு பட்டவர்களுக்கு இன்றைய எமது சங்கமானது என்றும் கடமைப்பட்டுள்ளது என்றே நாம் கூற வேண்டும்.

எமக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் 1953ம் ஆண்டு தொடக்கம் 1982ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் எமது சங்கத்தின் வளர்ச்சிகளில் பின்வருவோர் பங்குடையவர்களாய் இருந்தனர். அவர்களாவன, திரு. ஆனந்தராஜ், திரு.இம்மானுவேல், திரு. சுபாஷ், திரு.பொபி அசராயா, திரு. மனோ, திரு. ஜோசப் செல்லையா, திரு. விக்டர் டானியல், திரு. ஹென்றி, திரு. பிச்சைமுத்து, திரு.ஜீவா ஸ்டேனிஸ்லொஸ், திரு. செல்வநாதன், திரு. போ்டி, திரு. ஜோயல் சத்தியநாதன், திரு. எட்வேட் செல்லையா, அருட்திரு. ஜோசேவ் தேவமுத்து, அருட்திரு. தர்மராஜ், திரு. எபநேசன் செல்லையா, திரு. ஜோதிராஜ் என்பவர்களுடன் பெண்கள் பிரிவில் திருமதி. எஸ்.பாலன், திருமதி. கலா, திருமதி. வயலட் வேதமுத்து, திருமதி. சரோஜினி ஜெபநேசன், திருமதி. மேசி டேனியல் ஆகியோர் பெரும் பங்காற்றியுள்ளனர்.

மேலும், குறிப்பிடவேண்டிய சிறப்பம்சம் யாதெனில் எமது சங்கத்தின் 20ம் ஆண்டு நிறைவை பூர்த்தி செய்யுமுகமாக திரு. ஆனந்தராஜ், திரு. விக்டர் டேனியல், திரு. இம்மானுவேல், திரு. ஸ்டெனிஸ்லொஸ், திரு. பிச்சமுத்து, திரு. ஜோயல் சத்தியநாதன், திரு. சுபாஷ், திரு. எட்வட் செல்லையா, திரு. ரட்ணராஜ், திரு. சந்திரா பாலன் ஆகியோர் உற்சாகத்துடன் செயற்பட்டனர் என எமக்கு கிடைத்த சில தகவல்களினடிப்படையில் அறியக்கூடியுள்ளன.

1982 - 1983 காலப்பகுதியானது எமது சங்கத்தின் ஒரு பொற்காலப்பகுதியாகும். காரணம் எமது சங்கம் செதுக்கப்பட்டு 30 ஆண்டு நிறைவு பெறுவதை நினைவு கூர்ந்த காலமாகும். இந்நினைவு கூறல் விழா அன்றைய காலப்பகுதிக்குரிய

குருவானவர் கனம் பெனட் பாலசிங் அவரினதும், எமது சங்கத்தின் தலைவராக இருந்த திரு. ஆர்.பொன்னம்பலம் என்பவரின் தலைமைத்துவத்தின் கீழ் நடாத்தப்பட்டதாக அறியக்கூடியுள்ளது.

மேலும், இதே காலப்பகுதியில் எமது சங்க அங்கத்தவரான திரு. ஜோசுவா ஜேசுதாசன் என்பவர் இலங்கைத் திருச்சபை வாலிபர் இயக்கத்தின் தலைவராகவும், தேசிய கிறிஸ்தவ பேரவையின் செயலாளராகவும் நியமனம் பெற்றார். அவரைப் போன்றே இன்னுமொரு அங்கத்தினரான திரு. S.சைமன் என்பவர் இலங்கைத் திருச்சபை வாலிபர் இயக்கத்தின் தமிழ் உப குழு செயலாளராக பொறுப்பேற்றார். முதல் தடவையாக எமது சங்க அங்கத்தினர்கள் இவ்வாறான பதவிகளை வகிப்பது எமது சங்கத்திற்கே மிகவும் பெருமை வாய்ந்த விடயமாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட குருவானவரினதும், சங்கத்தலைவரினதும் பொறுப்பிலிருந்த எமது சங்கத்தில் அங்கத்தவரான திரு. ஜெயராஜ் செல்லையா என்பவர் இலங்கைத் திருச்சபை வாலிபர் இயக்கத்தின் உபசெயற்குழு தலைவராக தெரிவான விடயம் எமது சங்கத்திற்கு கிடைத்த மேலும் பெருமைக்குரிய விடயங்களில் ஒன்றாகும்.

கனம் ஜோசப் எஸ். சாள்ஸ் என்ற குருவானவரின் ஆதரவிலும் திரு. ராஜா என்பவரது தலைமைத்துவத்தின் கீழ் செயற்பட்டு வந்த சங்கத்திற்கு திரு. திருமதி செல்லப்பா அவர்களால் முதல் முறையாக Banner ஒன்று வழங்கப்பட்டது. மேலும் அவ்வருடத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டிக்கு திரு. திருமதி. இம்மானுவேல் அவர்களால் வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டது. இது போன்ற நடவடிக்கைகள் மூலம் சபையார் மத்தியில் எமது சங்கம் கொண்டிருந்த நன்மதிப்பைக் காணக்கூடியதாக உள்ளது.

திரு. M.M.G சாமுவேல் என்பவர் தலைவராக செயற்பட்டு வந்த காலப்பகுதியில் எமது வாலிபர் சங்கமானது முதன்முறையாக பொது இடமான தெஹிவளை விலங்கினக் காட்சி சாலையில் கூடப்பட்டதாக அவ்வாண்டுக்குரிய அறிக்கையின் மூலம் அறியக்கூடியதாய் உள்ளது. மேலும், இவ்வாண்டிலேயே "வாலிபர் அரங்கு' என்ற பகுதி சபையின் மாதாந்த பத்திரிகையில் முதன்முறையாக தோன்றியது. எமது சங்கத்தின் நத்தார் ஒன்று கூடலும் முதன்முறையாக எமது சபை மண்டபத்திலேயே நடாத்தப்பட்டது. இலங்கை தெற்கு பிராந்தியத்தினால் நடாத்தப்பட்ட மெய்வல்லுனர் போட்டியில் எமது சங்கம் முதலிடத்தைப் பெற்றது (திகதி?).

எமது சபையின் மேய்ப்பராக கனம் A.C.E. கோயில்பிள்ளை அவர்களும், எமது சங்கத்தின் மேய்ப்பராக திரு. அன்று சுந்தர்சிங் என்பவரும் தலைமைத்தாங்கிய

எமது சங்கத்தில் பல ஆவிக்குரிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அவையாவன எமது ஆலயத்திலுள்ள சங்கங்களுக்கிடையே புரிந்துணர்வு காணப்படவேண்டும் என்ற நோக்கில் எமது சங்கமானது தாய்மார் சங்கத்துடன் இணைந்து வேதாகம வினாவிடைப் போட்டியை நடாத்தியது. மேலும் சகோ. மதுரநாயகம் என்பவரது தலைமையில் விழிப்பிரவுக் கூட்டம் நீண்ட இடைவெளிக்குப் பின் நடாத்தப்பட்டது.

வாலிபரை மென்மேலும் உற்சாகப்படுத்த விரும்பிய சங்கத்தின் தலைவரான திரு. G சுப்பிரமணியம், போதகர் A.C.E கோயில்பிள்ளை போன்றோரது அன்பு கலந்த ஒத்துழைப்பின் மூலம் பற்பல சுவை மிகும் நிகழ்ச்சிகள் நடைப்பெற்றன. அத்துடன் விளையாட்டுத்துறையிலும் சங்கம் அதிவேகமாக முன்னேறியது.

1991, 1992ம் ஆண்டில் வாலிபர் அனைவரையும் ஊக்கப்படுத்தி அவர்கள் புதுமை விரும்பிகளாக மாற வேண்டும் என்ற எண்ணத்துடன் பல விநோதம் கலந்து சிந்தனைக்குரிய தலைப்புகளுடன் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. மேலும், இவ்வாண்டில் தமது பொன்விழாவை கொண்டாடிய பரி. மிகாவேலின் ஆலய வாலிபர் சங்கத்தினரோடு எமது சங்கமும் பங்கேற்று சிறப்பித்தது.

1993, 1994 காலப்பகுதியும் எமது வாலிப வரலாற்றில் மிகவும் குறிப்பிடக்கூடிய காலப்பகுதியாகும். காரணம் இவ்வாண்டிலேயே எமது சங்கம் முதல்முறையாக வாலிபர் மூன்று நாட்கள் முகாமொன்றை வடிவமைத்தனர். "விதை ஒன்று விருட்சமாகிறது" என்ற பெயருடைய இம்முகாமை வடிவமைத்த பெருமை அன்றைய சங்கத்தின் தலைவராக பொறுப்பேற்றிருந்த திரு. கிறிஸ்டி வொட்சன் என்பவரையும், அவருக்கு ஆதரவளித்த கனம் ஐசக் செல்வரட்ணம் போதகரையும், மேலும் அவரது செயற்குழு அங்கத்தினரையுமே சாரும்.

அடுத்தாண்டும் திரு. கிறிஸ்டி வொட்சனின் தலைமைத்துவத்தின் கீழ் அநேக காரியங்கள் நடாத்தப்பட்டன. முக்கிய நிகழ்ச்சியாதெனில் எமது சங்கத்துடன் சேர்ந்து மேலும் 5 சபை வாலிபர்கள் இணைந்து ஈஸ்டர் சிறப்பு நிகழ்ச்சியாக "கல்வாரியின் குரல்" என்ற பெயரில் மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி முதன் முறையாக நடாத்தப்பட்டது. கிறிஸ்மஸ் சிறப்பு திட்டமாக ஆதரவு என்ற பெயரில் திருகோணமலைப் பகுதிகளில் அகதிகளாக உள்ள 300 குடும்பங்களுக்கு உதவியதாக தகவல்களின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

ஆதரவு என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட சமூகப் பணியானது அடுத்தாண்டிலும் தொடர்ந்து செயற்பட்டதாக அறியப்பட்டுள்ளது. இச்செயற்திட்டமானது திரு. அன்று செல்வராஜ் என்பவர் தலைவராக பொறுப்பேற்றிருந்த போது ஆதரவு II என்ற பெயரில் திரு. கொட்றிஜ் தம்பதியினரின் உதவியோடு எமது சபையிலேயே வறிய குடும்பம் ஒன்றிற்கு ஆதரவு வழங்கப்பட்டது. மேலும், அவ்வாண்டு நடைபெற்ற

அகில இலங்கை வேதாகமப் போட்டியில் எமது சங்க அங்கத்தினர்களான திருமதி. புளோரா பிலிப், அசோக் செல்வராஜா, ஆதவன் செல்வரட்ணம், சுவேந்திரினி கோயில்பிள்ளை ஆகியோர் பங்குபற்றி முதலிடத்தைப் சுவீகரித்துக் கொண்டு எமது சங்கத்திற்கு பெருமையைத் தேடிக்கொடுத்தனர். அத்துடன் கொழும்பு தெற்குப் பிராந்திய வாலிபர் ஒன்றியத்தால் நடாத்தப்படும் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் எமது சங்கமும் பங்குபற்றி 2ம் இடத்தைப் பெற்றது சங்கத்திற்கு மேலும் பெருமையைத் தேடிக்கொடுத்தது.

1996, 1997ம் ஆண்டில் எமது சங்கத்தின் தூணாக செயற்பட்டு வந்த திரு. ஜெயராஜ் செல்லையா என்பவர் குருப்பட்டம் பெற்று தன்னை தேவ ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தார். இவ்விடயமானது எமது சங்கத்திற்கு பெருமைக்குரிய விடயங்களில் ஒன்றாகும். அத்துடன் அவ்வருடத்தில் கொழும்பு தெற்குப் பிராந்திய வாலிபர் ஒன்றியத்தால் நடைப்பெற்ற விளையாட்டுப் போட்டியில் திரு. அலெக்ஸ் சைமன் என்பவரின் தலைமையில் எமது சங்கமும் கலந்து கொண்டு 2ம் இடத்தைப் பெற்றது. இப்போட்டியில் திரு. துஷாரா என்பவர் Under 17 சிறந்த விளையாட்டு வீரராக தெரிவு செய்யப்பட்டார்.

திரு. போல் போல்ராஜ் தலைவராக செயற்பட்டு வந்த அடுத்த ஆண்டு இலங்கைத் திருச்சபை வாலிபர் இயக்கத்தினால் நடாத்தப்பட்ட வருடாந்த விளையாட்டுப் போட்டியில் எமது சங்கம் பங்கேற்று முதலாம் இடத்தைப் பெற்று பல வெற்றிக்கிண்ணங்களை தனதாக்கி கொண்டது. இப்போட்டியில் Under 17 பெண்கள் பிரிவில் Nadeeka என்பவரும் Under 17 ஆண்கள் பிரிவில் Lloyd David என்பவரும் over 21 ஆண்கள் பிரிவில் L.Daniel என்பவரும் சிறந்த விளையாட்டு வீரர்களாக தெரிவுசெய்யப்பட்டமை எமக்கு பெருமைக்குரிய விடயமாகும். இவ்வாண்டில் பரி. லூக்காவின் ஆலயம் பொரல்ல வாலிபர் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட Six a Side Cricket போட்டியில் எமது சங்கத்தை சேர்ந்த பெண்கள் 2ம் இடத்தையும் ஆண்கள் இணை விளையாட்டு வீரர்களாகவும் வெற்றி பெற்றனர்.

எமது வாலிபர் சங்கத்தை தொடர்ந்து சிறப்பான முறையில் கொண்டு நடத்த வேண்டுமெனில் சங்க அங்கத்தினரது பூரண ஒத்துழைப்புடன் அவர்களது நன்கொடைகளும் அவசியமே. அவ்வாறு அவர்கள் கொடுக்கும் நன்கொடைகளை தங்களிடத்திலேயே சேமித்து வைக்காது அவற்றை மேலும் மேலும் விருத்தி செய்யும் நோக்கத்துடன் திரு. ராஜ்குமார் சுபாஷ் சங்கத்தின் தலைவராகவும், திரு. இலங்கோ ஜெபநேசன் தனாதிகாரியாகவும் செயற்பட்டு வந்த இக்காலப்பகுதியில் எமது சங்கத்திற்கென்று முதல் தடவையாக வங்கியில் வைப்புக்கணக்கு ஆரம்பிக்கபட்டது ஒரு சிறப்பம்சமாகும். மேலும், இலங்கைத் திருச்சபை வாலிபர் இயக்கத்தில் எமது சங்கத்தைச் சேர்ந்த திரு. கிறிஸ்டி வொட்சன் தமிழ் உப குழு

தலைவராகவும், திரு. அன்சலம் பிலிப் செயற்குழு அங்கத்தினராகவும் தெரிவு செய்யப்பட்டது எமது சங்கத்திற்கு பெருமைக்குரிய விடயங்களில் ஒன்றாகும்.

2000/2001ல் சமாதானத்தைப் பற்றி பேசப்பட்ட இக்காலப்பகுதியில் கிறிஸ்தவர்களுக்கிடையே காணப்படும் சமாதானத்தை எடுத்துக்காட்டும் முகமாக திரு.போல் போல்ராஜ் என்பவரது தலைமைத்துவத்தின் கீழ் நடாத்தப்பட்ட 'சமாதான கானங்கள்' என்ற இன்னிசை நிகழ்ச்சி அன்றைய எமது சங்கத்தின் பெரும் வெற்றிமுழக்கமாகும். இந்நிகழ்ச்சிக்கு முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் தந்த போதகர் கனம் ஜுபிலி பொன்னையா அவர்களையும், ஒத்துழைத்த அனைத்து சங்க அங்கத்தினரும் பாராட்டப்படவேண்டியவர்களே. 2001/2002 ஆண்டில் திரு. டினேஷ் டேவிட் தலைமையில் எல்லாத்துறையும் முன்னேறியது.

1983ம் ஆண்டு பொற்காலத்தைப் போலவே 2002/2003ம் காலப்பகுதி எமது சங்கத்திற்கு பொற்காலமாகும். காரணம் எமது சங்கம் தனது 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த அப்பொற்காலத்தைப் பொன்விழாவாக "துதி சமர்ப்பணம்" என்ற பெயர் சூட்டி மாபெரும் மகிழ்ச்சியுடன் திரு. அசோக் செல்வராஜ் என்பவரின் தலைமைத்துவத்தின் கீழ் கொண்டாடப்பட்டது. இக்காலப்பகுதியிலேயே நீண்ட இடைவெளிக்குப்பின் விழிப்பிரவு ஜெபக் கூட்டம் நடாத்தப்பட்டது. மேலும் இவ்வாண்டிலேயே முதல் முறையாக சங்கத்தினால் 2 தினங்கள் சுற்றுலாவும் மேற்கொள்ளப்பட்டது. முதல் தடவையாக வாலிபர் சங்கமாக சபையாரின் வீடுகளுக்குச் சென்று கரோல் பாடி மகிழ்ந்தனர். இந்நிகழ்ச்சிகள் யாவும் கனம் ஜுபிலி பொன்னையா போதகரின் மேற்பார்வையிலேயே நடைப்பெற்றது.

கடந்த (ஏறக்குறைய) 10 ஆண்டுகள் காலக்கட்டத்துக்குள் சகோதரி வீணு, சகோதரி சுகன்யா, சகோதரி மினோன் ஆகியோர் தொடர்ச்சியாக காரியதரிசிகளாகவும், உபகாரியதரிசிகளாகவும் வாலிபர் சங்கத்தை உற்சாகமாக நடத்திச் செல்ல உறுதுணையாக இருந்தனர்.

சகோதரி ரெபெக்கா, சந்திரகலா, தர்ஷினி, நிரஞ்சலா போன்ற மேலும் பல பெயர் குறிப்பிடாத பெண்கள் வாலிப சங்கத்தின் செயற்பாடுகளில் தமது பங்கினை வழங்கியுள்ளனர்.

இவ்வாறு எமது சங்கத்தின் பற்பல அம்சங்களையும் உள்ளடக்கியபடி 50 ஆண்டுகளையும் இன்புடன் கடந்து இன்றைய நாள் மட்டும் வாடா மலரைப்போல் மங்கா ஒளியுடன் பிரகாசித்து வருகிறதற்கு காரணம் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பரிபூரண ஆசீர்வாதமும், இந்நாள் மட்டும் எமது சங்கத்தை வழிநடத்தி வந்த சிறந்த மேய்ப்பர்களான தலைவர்களும், அவர்களுக்கு பேருதவி ஆற்றிய காரியதரிசிகளும் உறுதுணை புரிந்த சங்க உறுப்பினர்களும், இவை

எல்லாவற்றிற்கும் மேலாக சங்கத்தின் எல்லா நிலபரங்களிலும் ஆதரவாக ஆலோசணை வழங்கி ஜெபத்தில் தாங்கி வழிநடத்தி வந்த எல்லா போதகர்களுமே.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே எமது சங்கத்தை மென்மேலும் பலுகிப்பெருகச் செய்து எமது சங்கம் ஒரு ஆலமரமாக எல்லா வாலிபர்களுக்கும் நிழல் தரும் வண்ணமாக மாறி இன்னும் அநேக விழாக்களைக் காண அருள்புரிவாராக.

(இதில் ஏதாகிலும் மேலதிக விபரங்கள் இணைக்கப்பட வேண்டுமாயின் உள்நாட்டில், வெளிநாட்டில் வசிக்கும் அங்கத்தினர்கள் எம்மை தொடர்புகொள்ளலாம். தகுந்த ஆதாரங்களுடன் வழங்கப்படும் தகவல்கள் இத்துடன் இணைத்துக்கொள்ளப்படும். உங்கள் ஆலோசனைகளை எமக்கு வழங்குங்கள். நன்றி!)